பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

*12 04 2026 SUNDAY 7 15 PM*

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பழம்பெரும் திரைப்பட பின்னணி பாடகி *Asha Bhosle*-யின் மறைவுக்கு தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

2. விவசாயிகள் நலனுக்கான புதிய கைபேசி செயலியை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

3. அருணாச்சலப்பிரதேசத்திற்கு உட்பட்ட சில இடங்களின் பெயர்களை மாற்றும் நடவடிக்கைகளில் சீனா ஈடுபடுவது கடும் கண்டனத்திற்குரியது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

4. *Haiti*-யில் நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 30 பேர் உயிரிழந்தனர்.

5. ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா 3 வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>><<<<<

பழம்பெரும் திரைப்பட பின்னணி பாடகி ஆஷா போஸ்லே மறைவுக்கு தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், ஆஷா போஸ்லே-யின் மறைவு இசையுலகில் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், இசையுலகில் தனக்கென முத்திரை பதித்தவர் அவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

ஆஷா போஸ்லே பாடிய பாடல்கள் என்றென்றும் நிலைத்திருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பன்முக இசைத்திறன் கொண்டவர் ஆஷா போஸ்லே என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் புகழாரம் சூட்டியுள்ளார்.

ஆஷா போஸ்லே, தமது பாடல்கள் மூலம் உலகம் முழுவதும் உள்ள இசை ரசிகர்களை ஈர்த்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

அவருடன் தாம் நடத்திய உரையாடல்கள் மறக்க இயலாதவை என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர்கள் மற்றும் பல்வேறு கட்சியின் தலைவர்களும் ஆஷா போஸ்லே-யின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

ஆ□ா போஸ்லேயின் இறுதிச்சடங்குகள், மும்பை சிவாஜி பூங்காவில் நாளை மாலை 4 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பத்மவிபூஷன் உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்றுள்ள ஆஷா போஸ்லே, தனது 92 வயதில் மும்பையில் இன்று காலமானார்.

அவரது இசைப்பயணம் குறித்த ஒரு பார்வை.

*(வாய்ஸ் ஓவர் 81 செகண்ட்ஸ்)*

>>>>><<<<<

விவசாயிகள் நலனுக்கான புதிய கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

மத்தியபிரதேசத்தின் Raisen-ல் நடைபெற்ற வரும் வேளாண் திருவிழாவின் இரண்டாம் நாளான இன்று உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

மண்வளம் மற்றும் உரம் கையிருப்பு குறித்த விவரங்களை, விவசாயிகள் இந்த கைபேசி செயலி மூலம் துல்லியமாக அறிந்து கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளை தடுக்கும் நோக்கில், பல்வேறு புதிய அறிவிப்புகளையும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் இன்று வெளியிட்டார்.

>>>>><<<<<

அருணாச்சலப்பிரதேசத்திற்கு உட்பட்ட சில இடங்களின் பெயர்களை மாற்றும் நடவடிக்கைகளில் சீனா ஈடுபடுவது கடும் கண்டனத்திற்குரியது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவை சீர்குலைக்கும் எந்த நடவடிக்கையிலும் சீனா ஈடுபடுவது ஏற்புடையதல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதை சீனா நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

ஜம்மு கஷ்மீரில் அமர்நாத் யாத்திரை ஜூலை மாதம் 3ஆம் தேதி தொடங்கவுள்ளதாக துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா அறிவித்துள்ளார்.

ஜம்மு மக்கள் மாளிகையில் இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

ஆகஸ்ட் மாதம் 28ஆம் தேதி வரை 57 நாட்கள் இந்த யாத்திரை நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

அமர்நாத் கோவில் வாரியத்தின் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டதாகவும் திரு. மனோஜ் சின்ஹா தெரிவித்தார்.

>>>>><<<<<

இனி தேர்தல் களம்…

(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது சேலம் மாவட்டத்துக்கு உட்பட்ட 5 தொகுதிகள்.

(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 3 min. 25 sec. செகண்ட்ஸ்)

>>>>><<<<<

*Haiti-யில் நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 30 பேர் உயிரிழந்தனர்.*

*யுனெஸ்கோவின் உலக புராதன சின்ன பட்டியலில் இடம்பெற்றுள்ள Citadelle Laferriere-ல் ஈஸ்டர் பண்டிகையை ஒட்டி நடைபெறும் வருடாந்திர நிகழ்ச்சியின் போது இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.*

*>>>>><<<<<*

*ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா 3 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.*

*கிர்கிஸ்தானின் Bishkek-ல் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் 61 கிலோ எடைப்பிரிவில் Aman Sehrawat-ம், 86 கிலோ எடைப்பிரிவில் Mukul Dahiya-வும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.*

*ஆடவர் குழுப் பிரிவிலும் இந்தியாவிற்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.*

*ஆடவர் 125 கிலோ எடைப்பிரிவில் Dinesh Dhankhar வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*இப்போட்டியில், இந்தியா 2 தங்கம், 6 வெள்ளி, 9 வெண்கலப்பதக்கங்களை வென்றது.*

*>>>>><<<<<*

*ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில், குஜராத் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.*

***>>>>>END<<<<<***